REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 2உ புதன் (15—5—57) ★ ★ வெளியூர்: வைகாசி 3உ வியாழன் (16—5—57) இதழ் [288

குழந்தை மணத்திற்குத் தடை!

★

ஜார்ஜ்டவுன், மே 15—

கயானாவிலுள்ள இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகியோர் குழந்தை மணம் செய்வதைத் தடுக்க விரைவில் ஒரு சட்டம் உருவாக்கப்படும் என்று தெரியவருகிறது.

மணம் புரிந்துகொள்ள விரும்பும் ஆண்களுக்கு 16 ஆண்டுகளும், பெண்களுக்கு 14 ஆண்டுகளும் குறைந்த அளவு வயது இருக்கவேண்டும் என்று இந்தச் சட்டத்தின் மூலம் வற்புறுத்தப்பட்டுள்ளதாம்.

காங்கிரஸ் கோஷ்டிச் சண்டையின் எதிரொலி

மதுரை நகரசபைத் தலைவர் இராஜினமா

மதுரை, மே 14—

மதுரை நகரசபைத் தலைவரான ராணிசுப்பராம் அவர்கள் தனது பதவியை இராஜினமா செய்துவிட்டார் என்று தெரிகிறது.

பத்திரிகைகளுக்குத் தந்த குறிப்பொன்றில் அவர் கூறியிருப்பதாவது :—

"மதுரை நகர முனிசிபல் காங்கிரஸ், கட்சி பல கோஷ்டிகளாகப் பிளவுபட்டுக் கிடக்கிறது ; எனவே, என்னல் நகரசபை அலுவல்களைச் சுமுகமாக நடத்த முடியவில்லை.

"22 காங்கிரஸ் உறுப்பினர்கள் இருந்தும் 17 பேர்தான் நான் தலைவராக வாக்களித்தனர் ; எஞ்சியவர்கள், கட்சி ஒழுங்கிற்கும் கட்டுப்பாட்டிற்கும் புறம்பாக நடந்துகொண்டனர். அவர்கள்மீது இதுவரையில் பிரதேசக் காங்கிரஸ் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை ; எனவே, மேலிடத்தின் அனுமதியுடன் பிளவுபட்டுக்கிடக்கும் கட்சியை வைத்துக்கொண்டு தலைவராக நீடிக்க முடியாது என்பதால் நான் பதவியிலிருந்து விலகுகிறேன்."

ஊதிய உயர்வு எதிரொலி!

பத்திரிகைகளின் விலையை உயர்த்தப்போகிறார்களாம்!

அகமதாபாத், மே 14—

உழைக்கும் பத்திரிகையாளரின் ஊதிய நிர்ணயக் குழுவின் முடிவுகள் வெளியானதும், பத்திரிகை நடத்துவோர் வாசகர்களிடமிருந்தே அதிக வருவாய்த் தேடி ஊதிய உயர்வை சரிகட்டும் பணியில் முனைந்துவிட்டனர்.

புதிய ஊதிய விகிதம் தாய்மொழி ஏடுகளைப் பெரிதும் பாதிக்கப்படுமெனவும், எனவே அடுத்த வியாழன் முதல் பத்திரிகைகளின் விலையை இப்போதுள்ளதைவிட மூன்று புதிய காசுகள் உயர்த்துவதெனவும் அகமதாபாத் ஏடுகள் முடிவு செய்துள்ளனவாம்.

தென்னட்டில் இரயில் பாதை அமைப்பு

துப்புறவு நடைபெறும் இடங்கள்

புதுடில்லி, மே 15—

1956—57ல் மொத்தம் 2,800-மைல் தூரத்திற்கு இரயில் பாதை அமைப்பதற்கான துப்புறவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதில் 2,000 மைல்களுக்கு துப்புறவு வேலை நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

தென்னட்டில் பெங்களூர் — சேலம் ; திருவனந்தபுரம்—திருநெல்வேலி — கன்னியாகுமரி ; வேலூர் — காஞ்சீபுரம் இரயில் பாதைகளுக்கான துப்புறவு வேலை நடைபெற்று வருகிறது.

நஷ்ட ஈடு தரும் அவசரச் சட்டம்

உரிமைக்கு முரணனதென ஆலை நிர்வாகிகள் கூற்று

நடவடிக்கை எதும் எடுக்கக் கூடாது என நீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி, மே 14—

ஆமதாபாத்தில் கோபால் மில்ஸ் 1877-ல் ஆரம்பிக்கப்பட்டது.

1956-ல் ரூ. 10 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக ஆலையை மார்ச் மாதத்தில் மூடிவிட்டனர்.

ஏப்ரல் திங்களில், இந்திய அரசாங்கம், 'மூடப்படும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு தரவேண்டும்' என்று ஒரு அவசர சட்டம் நிறைவேற்றியது; இந்தச் சட்டத்தை எதிர்த்து ஆலை நிர்வாகிகள் மனுச் செய்துகொண்டனர்.

மத்திய அரசாங்கம் நிறைவேற்றியுள்ள அவசரச் சட்டம், தம் விருப்பப்படி தொழிற்சாலையை மூடும் உரிமைக்கு முரணகை உள்ளதென்று ஆலை நிர்வாகிகள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு தருவது சம்பந்தமாக ஆலை நிர்வாகிகளிடமிருந்து பணம் வசூலிக்கும் நடவடிக்கை எதும் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று சுப்ரீம் நீதிமன்றம் உத்திரவு பிறப்பித்துள்ளது.

கைத்தறிக்குப் பேராபத்தானதாகும் விசைத்தறி!

ஆலைப் பிரதிநிதி இரகசியத்தை அம்பலமாக்கிவிட்டாரா?

நெசவாளருக்கு சட்டபூர்வமான பாதுகாப்பும் உத்தரவாதமும் வேண்டும்

கைத்தறி வார விழாவில் அண்ணு

சென்னையில் நடைபெற்ற கைத்தறி வார விழாவில் அண்ணு அவர்கள் ஆற்றிய பேருரையின் இறுதிப் பகுதி இங்கு தரப்படுகிறது; முதல் இரு பகுதிகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன :—

பணம் சேர்க்க இயலாத தொழில்!

உழவுத் தொழிலிலும், நெசவுத் தொழிலிலும் ஈடுபட்டவர்கள் பணம் சேர்த்தவர்கள் உண்டா? கேள்விப்பட்டிருக்கிறோமா, நாம்? பெட்டிக் கடை வைத்திருப்பவன் கூடச் சம்பாதித்திருக்கிறன்; ஆனல் இந்த இரு தொழில்களில் ஈடுபட்டவர்களும் சம்பாதித்ததே இல்லையே!

எந்தக் காலமோ?

"நெசவுத் தொழிலில் ஈடுபட்டவர்கள், இப்படி மிக ஏழைகளாய், வாழ்க்கைக்குப் போதுமான பாதுகாப்பற்றவர்களாய் உள்ளனரே! அவர்களது வாங்கும் சக்தி மிகக் குறைந்ததாயிருக்கிறதே! அவர்களை மேலுக்குக் கொண்டு வருவது எப்போது?

ஏழை அன்னையின் நிலை!

"வாங்கும் சக்தி என்றால் என்ன? ஏழைத் தாய், அழுகின்ற குழந்தையைத் தூக்கிக்கொண்டு தெருவழியே வரும்போது பொம்மைக் கடை ஒன்றைப் பார்த்துவிட்டால், அந்தக் குழந்தை பொம்மைக் கடையைப் பார்த்துவிடாமலிருக்க தந்திரமாகப் போக்குக் காட்டி, 'இந்தப் பக்கம் திரும்பிப் பார்,' என்று கூறி, வீதியில் விற்கும் பலூனை வாங்கித் தருகிருள் அல்லவா? பொம்மை வாங்க எட்டணுவேண்டும்; ஆனல் அதற்கு, தன் மடியில் உள்ள ஓரணு போதாது; பலூன் வாங்கத்தான் அது பயன்படும் என்ற நிலை இருக்கிறதே—தந்திரக்காரத் தாயின் நிலை, அதைத்தான் வாங்கும் சக்தி என்று சொல்லலாம்.

வறுமைக்கு இருக்கும் வல்லமை!

"இப்படி, வறுமையால் நெசவாளர்கள் வாடுகிருர்கள்.

"வறுமைக்கு இருக்கிற வல்லமையே என்னவென்றால், அது நிலவுவது ஓரிடம் என்றாலும், விஷச் சக்கரம்போல எல்லா இடங்களையும் அது பாதிக்கும் என்பதுதான்!

"சமூகத்தில் ஒரு பிரிவினரான நெசவாளர்கள் இப்படி வறுமையில் உழலுவது, சமூகம் முழுவதையும் பாதிக்கக்கூடியது அல்லவா? இந்த நிலையிலிருந்து அவர்களை மேலுக்குக் கொண்டுவருவது அவசியமல்லவா?

வழி ஏற்பட மார்க்கம்

"மார்க்கெட் தேடுவதில். இன்னும் ஒன்றுகூற விரும்புகிறேன். இது போன்ற விழாக்களுக்கு இங்குள்ள அன்னியர் நாட்டுத் தூதுவர் அலுவலகத்தவரையும் காம் அழைத்துவந்து காட்ட வேண்டும். அப்படி அவர்களைக் கூட்டி வந்து கைத்தறியாளர் நெய்த துணிகளைக் காட்டும்போது அவர்களுக்கு, இந்தத் துணியை நெய்பவர்களின் கஷ்ட நிலையையும் எடுத்துரைக்க வேண்டும். அப்படிச் செய்தால், அவர்களில் வியப்பினுல் சிலரும், பரிதாபத்தினுல் சிலரும், தங்கள் நாடுகளில் மார்க்கெட் கிடைப்பதற்கு வழி செய்யக்கூடும்.

உயிரூட்டம் உள்ள இயந்திரம் தேவை

"அடுத்தபடியாக, வெளிநாடுகளில் மார்க்கெட் தேடுவதற்கு அந்த நாடுகளில் உள்ள தூதுவர் அலுவலக அதிகாரிகளை மட்டும் அனுப்பினுல் போதாது. கைத்தறித் தொழிலில் நேரடி அனுபவமுடைய வியாபாரிகளையும் அனுப்ப வேண்டும். இதற்கு சர்க்கார் உயிரூட்டமுள்ள ஒரு இயந்திரத்தை உருவாக்கியாக வேண்டும்.

"மூன்றாவதாக, சர்க்காரே கைத்தறித் தொழிலுக்கு உதவ முடியும். பட்டாளத்திற்கென்று ஆண்டுதோறும் ரூ. 200 கோடி செலவிடப்படுகிறது. அந்தப் பட்டாளத்திற்குத் தேவைப்படும் துணிகள் எல்லாம் கைத்தறியால் நெய்யப்பட்டதாக

(4-ம் பக்கம் பார்க்க)

சாமான் போக்குவரத்தில் மேல்விகிதக் கட்டணம்

புதுடில்லி, மே 14—

இப்போது விலக்கு அளிக்கப்பட்டுள்ள பொருள்களுக்கு $12\frac{1}{2}$ சதவிகிதம் இரயில் கட்டண 'சப்ளிமெண்டரி சார்ஜ்,' (மேல் விகிதக் கட்டணம்) பிரயோகம் ஆகாது.

அப்பொருள்கள் வருமாறு: தானியங்கள், உலுந்துப் பயிறு வகைகள், தீவனப் பொருள்கள், உரம், கதர், பத்திரிகைகள், பத்திரிகைக் காகிதம் (நியூஸ் பிரிண்ட்), புத்தகங்கள்.

ஒரு முழு ஆண்டில் இந்த அதிகப்படியான 'சப்ளிமெண்டரி' கட்டணம் மூலம் கூட்ஸ் போக்குவரத்தில் சுமார் ரூ. 11·3 கோடியும், பார்சல் போக்குவரத்தில் ரூ. 1·2கோடியும் அதிகப்படியாகக் கிடைக்கும். ஆனல் இந்த அதிகரிப்பானது இந்த ஆண்டு ஜூலை 1-ந் தேதி முதல்தான் அமுலுக்கு வருமாகையால் நடைமுதல் நிதி ஆண்டில் அதிகப்படியாகக் கிடைக்கும் வருமானம் சுமார் ரூ. $9\frac{1}{2}$ கோடிதான்.

ஜனநாயகத் தீர்ப்பு மதிக்கப்படாவிட்டால் மராட்டியத்தில் மீண்டும் போராட்டம்?

மக்கள் சபையில் எச்சரிக்கை

புதுடில்லி, மே 14—

"ஜனநாயகத்தின் தீர்ப்பு மதிக்கப்படாமலிருக்குமானல், சத்தியாக்கிரகம், பொது வேலைநிறுத்தம், ஹர்த்தால், முதலியன மராட்டியமெங்கும் மீண்டும் துவங்கப்படும் என எச்சரிக்க விரும்புகிறேன்; நடைபெற்ற தேர்தலில் சம்யுக்த மராட்டிய சமிதி பெற்றுள்ள வெற்றியை நினைவுபடுத்துகிறேன்"

என்று, சமிதி டிக்கெட்டில் வெற்றிபெற்ற கம்யூனிஸ்டுத் தலைவர் எஸ். ஏ. டாங்கே மக்கள் சபையில், குடியரசுத் தலைவர் உரைமீது நடைபெறும் விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போது குறிப்பிட்டிருக்கிறர்.

மேலும் பேசுகையில் அவர் எதிர்த்தார்போல் உட்கார்ந்திருந்த மொரார்ஜி தேசாயை நோக்கியவண்ணம் கூறியதாவது :—

"பம்பாய் நகரம் மராட்டியர்களுக்குக் கிடைப்பதை எத்தனை துப்பாக்கிப் பிரயோகங்களாலும் தடுத்துவிட முடியாது.

"துப்பாக்கியால் சுட்டவர்கள், உயர்ந்த மந்திரி பதவிகளைப் பெறலாம்; ஆனல், மராட்டிய மக்கள்—பம்பாயுடன் கூடிய மராட்டிய மாநிலத்தையும், குஜராத்தி மக்கள்—மகா குஜராத் மாநிலத்தையும் பெறுவதைத் தடுக்கமுடியாது.

"ஜனநாயகம் மதிக்கப்படாமல், துப்பாக்கி முனையால் நசுக்கப்படுமானல், மராட்டிய மக்கள் தரும் பதிலும் கடுமையானதாகவே இருக்கும்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 15—5—57 புதன்

சிறு சிறு காங்கிரசுக் கோட்டைகள்!

சமுதாய நலத் திட்டம், வட்டார நலத்திட்டம், தேசிய விஸ்தரிப்புத் திட்டம் ஆகிய பெயர் கொண்ட சில ஏற்பாடுகளை அரசாங்கம் நடத்திவருவதாகச் சொல்லப்படுகிறது. அத்திட்டங்கள் இடம் பெற்றுள்ள சிற்றூர்கள் காலப்போக்கில் மெள்ளமெள்ள உயர்தரமான சுக வாழ்வைப் பெற்றுவிடக்கூடும் என்றும் காங்கிரசு அமைச்சர்கள் பறைசாற்றிவருகின்றனர். அத்திட்டங்களை மேலும் பலசிற்றூர்களில் நடைமுறைக்குக் கொண்டுவரப் போவதாகவும் அந்த அமைச்சர்கள் அறிவித்தும் உள்ளனர்.

மேற்படி மூன்று வகையான திட்டப் பகுதிகளிலும் இலட்சக்கணக்கில் பணம் செலவிட்டிருப்பதாகவும், செலவிட்டப் பணத்தின் அளவைவிடக் கூடுதலான நலத்தை அப்பகுதி மக்கள் பெற்றிருப்பதாகவும் காங்கிரசு ஆளவந்தார் பெருமைப் பட்டுக்கொள்கிறார்கள். ஆனால் மேற்படித்திட்டங்கள் இதுவரை விழுங்கியுள்ள பெருந்தொகைக்கு ஈடான பலன் கிடைக்கவில்லையானாலும் குறிப்பிட்ட அளவு பலன்கூட கிடைக்கவில்லை என, அத்திட்டத்திற்கென்றே அமைச்சராகப் பணிபுரிந்துவரும் மத்திய ஆட்சி அமைச்சர் சில நாட்களுக்குமுன் வெளிப்படையாகக் குறைபட்டுக் கொண்டுள்ளார்.

சிற்றூர் மக்கள் தங்கள் தேவைகளை உணர்ந்து தாங்களாக முன்வந்து, தங்கள் உழைப்பையும் அளித்து, மேலும் தேவைப்படுவதற்கு அரசாங்கத்தின் பண உதவியையும் பெற்று, தம்தம் சிற்றூர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் சமுதாய நலத் திட்டத்தின் சாரம் என்று விளக்கப்படுகிறது. இந்த இலட்சியத்தை அடைவதில் மேற்படி மூன்று வகையான ஏற்பாடுகளும் எந்த அளவில் வெற்றி அடைந்திருக்கின்றதோ, அதைக் கொண்டுதான் மேற்படி திட்டங்களுக்கு வெற்றி கிட்டியிருக்கின்றதா, தோல்வி ஏற்பட்டிருக்கின்றதா என்பதை நிர்ணயிப்பது கைகூடுவதாகும்.

ஆனால் மேற்படித் திட்டங்களோ, மேற்குறித்துள்ள இலட்சியத்தில் கடுகளவு வெற்றியையும் இதுவரை பெற்றிருப்பதாகச் சொல்வதற்கில்லை. அடிப்படை இலட்சியத்திற்கு வெற்றி ஏற்படவில்லை என்பதுடன் மட்டுமல்லாது, அந்த இலட்சியத்தை சிற்றூர் மக்களுக்கு உணர்த்துவதிலும்கூட மேற்படித் திட்டங்கள் கடுகளவு வெற்றியும் இதுவரை அடைந்துள்ளதாகச் சொல்லுவதற்கில்லை.

மேலே சுட்டிக்காட்டியுள்ள இலட்சிய தோல்வி குறித்தும் மத்திய அமைச்சர் ஒளிவு மறைவு இல்லாமல் ஒப்புக்கொண்டுள்ளார். அவரே, திட்டம் எதிர்பார்க்கப்பட்டவகையில் கணிசமானத் தோல்வியை அடைந்திருக்கின்றது என்று கவலை தெரிவித்துப் பேசி இருக்கின்றார்.

மேற்படி மூன்றுத் திட்டங்களும், நிறைவு கொண்டவைகளாக இருந்தாலும் அல்லது குறைபாடு உடையவைகளாக இருந்தாலும், அவைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காக, ஆட்சியாளர்கள் சிற்றூர் மக்களை அணுகும் முறை பழுதுடையதாக இருந்துவருகிறது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

எதற்கெடுத்தாலும் கட்சி அரசியல் கூடாது என்று கனல் கக்கிப் பேசிவருகின்ற காங்கிரசு ஆளவந்தார்கள், மேற்படி திட்டப் பகுதிகளை தங்கள் கட்சியினருக்கும் ஆதரவாளர்களுக்கும் வேலை அளிக்கும் அரிய ஏற்பாடுகளாக மாற்றியுள்ளனர். அங்கு காங்கிரசு அரசியல் கோரத் தாண்டவம் புரிந்துவருகிறது.

ஊரார் உழைப்பிலும் பணச் செலவிலும் தங்கள் கட்சியைக் கட்டிக் காக்கும் சிறு சிறு கோட்டைகளாக சமுதாய நலத் திட்டப் பகுதிகளை காங்கிரசு ஆளவந்தார்கள் அமைத்துக் கொண்டுள்ளனர். எனவே, அங்கு பொதுமக்களிடை கூட்டுறவு உணர்வு அரும்புவதற்குப் பதிலாக, ஏற்கனவே இருந்துவரும் வேற்றுமை உணர்வு விரிவுபட்டு வருவதற்கு இடமாகிறது என்பதில் வியப்பொன்றும் இல்லை.

பாதை அமைத்தல், பள்ளி ஏற்படுத்தல், முதியோர் கல்வி போதித்தல், குடிநீர் கிணறு வெட்டல், குடியிருப்பு வசதி செய்தல், நூல் நிலையம் திறத்தல் போன்ற பணிகள்தான் மேற்படி மூவகைத் திட்டங்களுக்கும் பொதுவான நற்பணிகளாக இருக்கின்றன. இந்தத் திட்டங்கள் ஒன்றும் புதியன அல்ல. ஏற்கனவே இத்திட்டங்களை ஊராட்சி மன்றமும், மாவட்ட ஆட்சி நிறுவனமும், மாநில ஆட்சி அமைப்பும் செயலாற்றி வந்துள்ளன. இப்பொழுதும் அப்பணிகளைச் செயலாற்றி வருவதிலிருந்து மேற்படி நிறுவனங்கள் விலகிவிடவில்லை.

இருந்தாலும் பகட்டான புதியப்பெயர்களை இட்டு, அதற்கென புதியத் தத்துவத்தைக் கற்பித்து, இதுவரை வேறு அமைப்புகள் ஆற்றிவந்த அதே பணிகளை அவைகளிடம் ஒப்படைத்து, தம் கட்சியைச் சேர்ந்தவர்களையும் ஆதரவாளர்களையும் அப்பணிகளில் அமர்த்தி, காங்கிரசு ஆளவந்தார்கள் பணத்தை வாரி வழங்கி வருகின்றனர். தம் கட்சியை வளர்க்கும் இத்திருப்பணியை காங்கிரசு அமைச்சு தெரிந்தே, வேண்டுமென்றே செய்து வருகிறது.

ஒருவருக்கொருவர் உதவ வேண்டும் என்ற நல்லுணர்வு, சிற்றூர் மக்களின் உள்ளங்களில் இடம் பெறுவதைக் காங்கிரசு ஆளவந்தார்களை விரும்பவில்லை என்பதற்கு, மேற்படி திட்டப் பகுதிகளில் ஒரு கட்சி ஆதிக்கத்திற்கு வேண்டுமென்றே இடமளித்து வருவது ஒன்றே போதுமான சான்றாகும்.

அம்மனப்போக்கை ஆளவந்தார்கள் மாற்றிக்கொள்ள முன்வந்தால் அல்லாது மேற்படி திட்டங்கள் முழுவெற்றி பெறுவதற்கான நிலை உருவாகப் போவது என்றும் கிடையாது.

எனவே, மேற்படி திட்டங்கள் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு சிற்றூரும் சிறு சிறு காங்கிரசுக் கோட்டைகளாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது என்று, காங்கிரசு ஆளவந்தார்கள் மீது நாம் துணிந்து குற்றஞ்சாட்டுகிறோம்.

'கைத்தறி ஏற்றுமதிக்கு அரசாங்க வர்த்தக நிறுவனம் வேண்டும்'

ஆந்திர மாநில காங்கிரஸ் தலைவர் பிரகத கோட்டையா கருத்து

மொரார்ஜி தேசாய்க்கு அவர்தரும் சூடு

ஏலூரு, மே 14—

'வெளிநாடுகளுக்குக் கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதை வளப்படுத்த ஒரு அரசாங்க வர்த்தகக் கார்ப்பரேஷன் நிறுவ வேண்டும்' என்பதாக ஆந்திர மாநிலக் காங்கிரஸ் தலைவரான பிரகத கோட்டையா எம்.எல்.ஏ. அவர்கள், யோசனை ஒன்று வெளியிட்டுள்ளார்.

அகில இந்தியக் கைத்தறி வார விழாவில் பேசிய அவர் கூறியதாவது:—

" 'சென்னை கைக்குட்டைகள்' என்றழைக்கப்படும் ஒருவகைக் கைத்தறித் துணிகள், ஏராளமான அளவில் மேற்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால், இந்த ஏற்றுமதி வியாபாரம் முழுவதும் இடைத் தரகர் வசமே உள்ளது துரதிருஷ்டவசமானதாகும். இவர்கள், ஈவுஇரக்கமின்றி நெசவாளர்களைச் சுரண்டுகின்றனர். எனவே, ஒரு அரசாங்க வர்த்தக நிறுவனம் ஏற்படுத்துவது அவசியமாகிறது.

மொரார்ஜிக்கு பதில்

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ள அளவு துணியை கைத்தறித் தொழில் உற்பத்தி செய்யாவிட்டால், அந்தக் 'கோட்டா' ஆலைகளுக்குத் தரப்பட வேண்டியிருக்கும் என்று மத்திய தொழில் மந்திரி மொரார்ஜி தேசாய் கூறியிருக்கிறார்.

"ஆண்டொன்றுக்கு 300 நாட்கள் வீதம் இப்போதுள்ள 28 இலட்சம் கைத்தறிகளுக்கு வேலை செய்ய முடிந்தால் கைத்தறிக்கு ஒதுக்கப்பட்டுள்ள 250 கோடி கெசம் துணியைவிட அதிகமாக 250 கோடி கெசம்—அதாவது, 500 கோடி கெசம் உற்பத்தி செய்யமுடியும்.

"ஆனால், அத்தனை தறிகளும் வேலை செய்யவேண்டுமானால், தேவையான நெம்பர் நூல்கள் உற்பத்தி விலைக்கு ஏராளமான அளவு கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

"இரண்டாவதாக, தறிகள் இயங்கத் தேவையான மூலதனம், கூட்டுறவு இயக்கத்தில் அடங்கியவர்களும் அடங்காதவர்களுமான நெசவாளர்களுக்கு முன்பணமாகத் தரப்படவேண்டும்.

"எனவே, எல்லா தறிகளும் ஆண்டு முழுதும் வேலை செய்யத் தேவையான வசதிகளைச் செய்துதரவேண்டியது, மாகாண—மத்திய சர்க்கார்களின் பொறுப்பாகும்.

ஆதரிப்பீர்!

"மக்கள் கைத்தறிக்கு ஆதரவு தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

போட்டியை தவிர்த்தால்

"இப்பொழுதே கைத்தறி, 150 இலட்சம் மக்களுக்கு வேலை தருவதாக உள்ளது. ஆலைகளின் போட்டியிலிருந்து அது பாதுகாக்கப்படுமானல், இன்னும் பல இலட்சம் பேர்களுக்கு—பற்றாக் குறை வேலையாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் அவதியுறுவோருக்கு அது வேலை தரக்கூடியதாகும்."

உணவுப் பற்றாக்குறை

மூடுமந்திரம் அம்பலம்

புதுடில்லி, மே 13—

இந்தியா முழுமையிலும் உணவுப் பற்றாக்குறை உள்ளது என்பதும், சில இடங்களில் பஞ்சம் ஏற்படுமோ என்ற பீதி நிலவுவதும் மக்கள் சபையில் ஏராளமான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொண்டுவந்துள்ள அவசரப் பிரேரபணைகளே போதிய சான்றாகும்.

ஆனால் இந்தப் பிரேரபணைகளுக்கு சபைத் தலைவர் அனுமதியளிக்கவில்லை.

உணவு அமைச்சர் ஒரு விரிவான அறிக்கையை மக்கள் சபைக்கு அளிப்பார் என்று தெரியவருகிறது.

சாலைகள் அபிவிருத்தி

269½ கோடி ரூபாய் போதாதாம்!

மேலும் 4,000 கோடி ரூபாய் செலவாகுமாம்

ஷில்லாங், மே 14—

முதலாவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதியில் மொத்தம் 3,16,668 மைல்கள் புதியசாலைகள் அமைக்கப்பட்டன.

இரண்டாவது திட்டத்தில் சாலை அமைப்புக்கென ரூ. 269½ கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது போதுமானதல்லவென்றும், மேலும் 4,000 கோடி செலவாகும் என்றும் இங்கு நடைபெற்ற சாலை அபிவிருத்தி மாநாட்டில் அசாம் கவர்னர் பசல்அலி தெரிவித்துள்ளார்.

மலபாரில் மேலும் 44 புதிய பள்ளிகள்

கோழிக்கோடு, மே 14—

மலபார் பகுதியில் அடுத்த கல்வி ஆண்டு துவக்கத்திலிருந்து மேலும் 44 உயர்நிலைப் பள்ளிகள் நடத்துவதற்கு கேரள அரசாங்கம் அனுமதி அளித்துள்ளதாம். இவைகளில் 16 பள்ளிகள் தனியார் நிர்வாகத்தில் இயங்கும்; மீதி 28 பள்ளிகளை மலபார் மாவட்ட ஆட்சி மன்றம் நடத்தும்.

பெட்ரோல் ஊற்று ஆராய்ச்சி

வங்கத்திலும் மேற்கொள்ளப்படுகிறது

பர்துவான், மே 14—

பஞ்சாப் மாநிலத்தில் ரஷ்யா, ருமேனியா ஆகிய நாடுகளின் பொறியியல் நிபுணர்கள் பெட்ரோல் ஊற்று சோதனையை நடத்திவருகின்றனர்.

இப்போது வங்கத்தில் மூகத்துவாரப் பகுதிகளில் பெட்ரோல் ஊற்று கண்டுபிடிப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகிறது.

பர்துவானுக்கு 4 மைல் தூரத்தில் நதா என்ற கிராமத்தில் சோதனைக் குழாய்க் கிணறு 10,000 அடி ஆழத்திற்குத் தோண்டப்பட்டுவருகிறது.

அமெரிக்க மின்பொறியியல் நிபுணர்கள் இந்த வேலையைக் கவனித்து வருவார்களாம்: இன்னும் ஆறு மாத காலத்தில் பெட்ரோல் ஊற்றைக் கண்டுபிடித்து விடலாம் என்று அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

வாக்காளர் பட்டியலில் திருத்தம்

நடைமுறை விளக்க அறிவிப்பு

சென்னை, மே 12—

சென்னை நகர வாக்காளர் பூர்வாங்கப் பட்டியல் வரும் செப்டம்பர் 14-ந் தேதியன்று வெளியிடப்படும்.

வெளியூர்களில் 1957 ஜூலை 15-ந் தேதியன்று பூர்வாங்க வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

இப்பட்டியல் வெளியான 21 நாட்களுக்குள், வாக்காளர் பட்டியலில் விட்டுப்போன பெயர்களைச் சேர்க்கவும், பட்டியலில் உள்ள பெயர்களுக்கு மறுப்பு தெரிவிக்கவும், அல்லது திருத்தங்கள் கொண்டு வருவதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மனுசமர்ப்பிக்கப்படவேண்டும்.

இத்தகைய பூர்வாங்கப் பட்டியல் வெளியிடும் வரையில் காத்திராமல் உடனே கோரிக்கைகளை தெரிவிப்பது நலமாகும் என்று அரசாங்கம் கருத்தறிவித்துள்ளது.

1957 மார்ச் 1-ந் தேதியன்று 21 வயது நிரம்பியவர்களுக்கும், அதைவிட அதிக வயதானவர்களுக்கும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற உரிமையுண்டு.

சாதாரணமாக, அந்தப் பகுதியில் வசிப்பவருக்கும், சொந்த வீட்டுக்காரருக்கும், மற்றும் குடியிருப்பவர்களுக்கும் இந்த உரிமை உண்டு.

இந்த அடிப்படையில், மாநிலம் முழுவதும் வாக்காளர்பட்டியலைத் திருத்தியமைக்க சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கிராமங்களில் கிராமாதிகாரிகளும், பெரிய பஞ்சாயத்துகளில் எக்சிகியூடிவ் அதிகாரிகளும், ஊராட்சி மன்றத்தின் நிர்வாகப் பகுதிகளில் ஆணையாளர்களும் இந்தத் திருத்த வேலையை ஏற்று, பூர்வாங்க வாக்காளர்பட்டியலைத் தயாரிப்பார்களாம்.

கோரிக்கைகள் கிடைத்தவுடன் தகுந்த புலன் விசாரணை நடத்தி முறைப்படி பட்டியலைத் திருத்தி அமைப்பார்களாம்.

பூர்வாங்கப் பட்டியல் வெளியானதும் தக்க திருத்தங்களும் செய்யப்படுமாம். இறுதி பட்டியலுக்கு நல்ல விளம்பரம் செய்து பொதுமக்களுக்கு ஆவன செய்ய வசதியளிக்கப்படுமாம்.

பொதுமக்கள், இந்தப் பூர்வாங்க வாக்காளர் பட்டியல் தயாரிப்பவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டுமென அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

தற்போதுள்ள வாக்காளர் பட்டியல், பொதுமக்கள் பார்வைக்கு வாக்காளர் பதிவு அதிகாரிகள் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

சென்னை நகரத்தின் பட்டியல், நகரசபை, ரெவினியூ அதிகாரி அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளதாம்.

இந்தப் பட்டியலைப் பார்வையிட்டபின், பட்டியலில் புதிதாக தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய விரும்புவோர் தவறுகளை திருத்த வேண்டுவோர் உடனடியாக ஆவன செய்ய வேண்டுகிறோம்.

அன்னியர் சிலைகளை அகற்றும் போராட்டம்

மக்கள் சபையில் வாக்கு வாதம்

பண்டிதர் கூறும் சமாதானம்

புதுடில்லி, மே 13—

வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் நிறுவப்பட்ட சிலைகளை அகற்றுவது பற்றி சர்க்காரின் கொள்கையை, பண்டித நேரு மக்கள் சபையில் விளக்கினார்.

சோஷலிஸ்டுத் தலைவர் பி. வி. ஜி. ராஜு, உ. பி. மாநிலத்தில் இதற்காக சோஷலிஸ்டுக் கட்சியினர் நடத்தும் போராட்டம் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்ததை தலைவர் நிராகரித்தார்.

அப்போது பேசிய பண்டிதர், இந்தச் சிலைகளைப் படிப்படியாக சர்வதேச ரீதியில் எந்தவித அதிருப்தியும் ஏற்படாத வண்ணம்—செத்துப்போன பிரச்சினைகளை மீண்டும் கிளப்பாவண்ணம் அகற்றுவதே என்றும் கூறியிருக்கிறார்.

சிலைகளில் பல ரகங்கள் உள்ளன என்றும், சில சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும், சில கலை நுணுக்கமுடையவை என்றும், சில நம்மால் வெறுக்கத் தக்கவை என்றும், இவற்றை அகற்றும்போது எந்தவித ஆர்ப்பாட்டமும் இன்றி சாதாரணமாகச் செய்யவேண்டும் என்றும், ஏற்கனவே பல சிலைகள் அவ்வாறு அகற்றப்பட்டுள்ளன என்றும், தொடர்ந்து அவ்வாறே செய்யப்படும் என்றும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சிலைகளை நாம், கண்காட்சிசாலைகளில் வைத்துக் காப்பாற்றலாம் என்றும், முக்கியத்துவம் எதும் இல்லாதனவற்றை என்ன செய்வது என்று தெரியவில்லை என்றும், எவரேனும் அவற்றை விரும்பினால், தாம் அவற்றை அவர்களுக்குப் பரிசாக அளிக்கலாம் என்றும் கூறியிருக்கிறார்.

---

30 திங்களில் 12,000 பேர்கள் உயிர் இழந்தனராம்!

அல்ஜீரிய சுதந்திரத்தின் விலை?

அல்ஜீரியா, மே 13—

"பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து அல்ஜீரியாவை விடுவிக்க வேண்டும் என்று கடந்த 30 திங்களாக நடை பெற்றுவரும் விடுதலைப் போராட்டத்தில் இன்றுவரை 12,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர்," என்று, பிரெஞ்சுத் தலைமை தளபதி தெரிவித்துள்ளார்.

மீண்டும் நான்கு வல்லரசுகள் மாநாடு

குருஷ்சேவ் விருப்பம்

நியூயார்க், மே 12—

'மீண்டும் ஒரு நான்கு வல்லரசு மாநாடு கூட்டவேண்டும்' என்று ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சிச் செயலாளர் குருஷ்சேவ் கூறியிருக்கிறார்.

"உலக நெருக்கடியைத் தணிப்பதில், அமெரிக்காவிற்கும் — ரஷ்யாவிற்கும் அதிலும் குறிப்பாக அமெரிக்காவிற்குத்தான் தலையாய பொறுப்பு இருக்கிறது" என்று அவர் கூறியிருக்கிறாராம்.

'நியூயார்க் டைம்ஸ்' இதழுக்கு அவர் தந்துள்ள பேட்டி ஒன்றின் போதுதான் அவர் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளுடன் ரஷ்யா சந்தித்துப் பேசுவதை தீர்மானமாக விரும்புவதாய்த் தெரிவித்திருக்கிறாராம்.

ஆனால், அத்தகைய ஒரு மேல்தட்டு மாநாடு மிகக் கவனமாக முன்கூட்டியே தயாரிக்கப்பட்டதாயிருக்கவேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அணு ஆயுதங்கள் மூலமே தாக்குதலாம்!

அதற்கான வசதிகள் உள்ளதாம்!

நியூயார்க், மே 13—

'சோவியத் ரஷ்யா ஐரோப்பாவைத் தாக்கினால், முதலில் அணு ஆயுதங்களைக் கொண்டு ரஷ்யாவைத் தாக்க நேச நாடுகள் தயாராக இருக்கிறது' என்று 'நாட்டோ' நாடுகள் தலைவர் ஜெனரல் நார்ஸ்டாட் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான வசதிகள் 'நாட்டோ' நாடுகளிடம் உள்ளதாம்.

பதிலுக்கு ரஷ்யா அணு ஆயுதங்களைப் பயன்படுத்தக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

ரஷ்யக் கோரிக்கைக்கு ஜப்பான் மறுப்பு

டோக்கியோ, மே 13—

"ஜப்பான்—ரஷ்யா இரண்டும் சேர்ந்து அணுகுண்டு சோதனைகளைக் கண்டித்து ஒரு குறிப்பை அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் அனுப்பலாம்" என்று ஜப்பானுக்கு ரஷ்யா ஒரு யோசனை கூறியிருந்தது.

இந்த யோசனையைக் கூறிய ரஷ்யா தொடர்ந்து அணுகுண்டுகளை வெடித்துக்கொண்டிருப்பதை சுட்டிக்காட்டி 'ஜப்பான், ரஷ்யாவுடன் சேருவது சாத்தியமில்லை,' என்று ஜப்பானிய அரசாங்கம் ரஷ்யாவுக்குப் பதில் தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

சிலை உடைப்புக்கு கலைக் கழக எதிர்ப்பு!

சென்னை, மே 15—

காசியிலுள்ள விக்டோரியா சிலை நாட்டின் கலைக் களஞ்சியம் என்றும், அதைப் பாதுகாக்க மத்திய அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் சென்னை ரவி வர்மா கலைக் கழகம் அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளது.

---

200 பேர் புத்த மதத்தை தழுவினர்

சென்னை, மே 14—

சென்னை—எழும்பூரில் உள்ள மகாபோதி சங்கத்தில் புத்தர் தோன்றிய 2,501-ம் ஆண்டு நிறைவு விழாவில் சுமார் 200 பேர் புத்தமதத்தை ஏற்றுக் கொண்டுவிட்டனர். இவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

இந்தியா இராணுவ மயமாக வேண்டுமாம்!

புதுடில்லி, மே 13—

"இராணுவ முறையில் முன்னேறியுள்ள மற்ற நாடுகளைப் போல இந்தியா தன்னை தயார் செய்துகொள்ளாமல் இருப்பது மிகவும் ஆபத்தானது. ஆயுதச் சட்டத்தை ரத்து செய்ய நாட்டில் கிளர்ச்சி செய்ய வேண்டும்" என்று, இந்து மகாசபைத் தலைவர் வி. டி. சவர்கார், 1857-ம் ஆண்டுப் போராட்ட நூற்றாண்டு விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

வடவரின் போலித்தனம்!

மீரட், மே 13—

அநேக போலி லேபிள்கள், புட்டிகள், சோப்புகள், மேலிடும் உறைகள் ஆகியவற்றை பல கடைகளிலிருந்து உத்திரப்பிரதேச அரசாங்கம் கண்டெடுத்துள்ளது. இது சம்பந்தமாக வியாபாரச் சின்னச் சட்டத்தை மீறியதாகவும், போலி சரக்குகளை விற்றதாகவும் 6 பேர்மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதாம்.

கழகச் செய்திகள்

சிவந்திபுரம்:

10—4—57-ல், சிவந்திபுரம் சிற்றூர் தி. மு. கழகக் கிளையின் அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் ஏ. செண்டு செயலாளராகவும்—பொருளாளராகவும், க. சு. முத்து துணைச் செயலாளராகவும், கே. காசிமணி மாவட்டப் பிரதிநிதியாகவும், மேலும் 11 பேர் செயற் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சூலூர்:

11—4—57 மாலை 6 மணிக்கு, கோவை — சூலூரில், தோழர் அற்புதசாமி தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் வணங்காமுடி, புலவர்-அறிவுடைநம்பி ஆகியோர் தி. மு. கழக சனநாயகப் பண்பு குறித்துப் பேசினர்.

தாமரைக்குளம்:

9—4—57-ல், தாமரைக்குளம் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், தோழர் ஆ. இராமசாமி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் சி. முத்திருளன் செயலாளராகவும், வி. சீனிவாசன் துணைச் செயலாளராகவும், கா. முகமது பொருளாளராகவும், பி. கிருட்டிணன் — எஸ். எம். குப்புசாமி விளம்பர உறுப்பினர்களாகவும், மேலும் 15 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேவியார்குறிச்சி:

10—4—57-ல், தேவியார் குறிச்சி தி. மு. கழகக் கிளையை, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினர்; அதுபோது, தி. மு. கழகச் சட்டமன்ற உறுப்பினர்களான தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம், டி. இருசப்பன் ஆகியோருக்குப் பாராட்டுதல் தெரிவிக்கப்பட்டது.

திருப்புளியன்குடி:

16—4—57-ல், திருப்புளியன்குடியில் தி. மு. கழகத் துவக்க விழா நடைபெற்றபோது, தோழர் வெ. கோமதிநாயகம் தலைமை தாங்கினர். தோழர்கள் தி. க. நெல்லையப்பர் ஆ. அண்ணாமலை ஆகியோர் பேசினர். தோழர்கள் பிலிப்ஜோசப் செயலாளராகவும், பு. செகந்நாதன் துணைச் செயலாளராகவும் பு. இராமையா மாவட்டப் பிரதிநிதியாகவும், 4 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தென் திருப்பேரை:

16—4—57-ல், தென்திருப்பேரை தி. மு. கழக 6-வது ஆண்டு விழா, தோழர் தங்கராசு தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் டி. கே. எஸ். பன்னீர்செல்வம், ஆ. அண்ணாமலை முதலியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

தேவிப்பட்டினம்:

13—4—57ல், தேவிப்பட்டின தி. மு. கழக அமைப்புக்கூட்டம் தோழர் மி. அழகப்பன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் உ. கு. கனி செயலாளராகவும், கா. கிருட்டிணன் துணைச் செயலாளராகவும், எஸ். இராசேந்திரன் பொருளாளராகவும், க. கு. காளியப்பன் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாதுங்கா (பம்பாய்):

14—4—57-ல், மாதுங்கா தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் தோழர் பொன்—திர. சபாபதி தலைமையில் கூடியபோது தி. மு. கழக பாராளுமன்ற உறுப்பினர்கள் பம்பாய் வருகையின்போது வரவேற்பளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

விக்கிரமசிங்கபுரம்:

15—4—57ல், விக்கிரமசிங்கபுரம் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் சு. கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் கா. ஆறுமுகம் செயலாளராகவும், சு. சுப்பையா துணைச்செயலாளராகவும், பா. கணபதி பொருளாளராகவும், மேலும் 13 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செங்குன்றம்:

17—4—57ல், செங்குன்றம் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது இரு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பணிமனைக்காக நிதி திரட்ட வேண்டுமென முடிவு மேற்கொள்ளப்பட்டது.

கொங்கராயன்குறிச்சி:

16—4—57ல், கொங்கராயன் குறிச்சியில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது தோழர்கள் சு. பா. கோவில் பிள்ளை செயலாளராகவும், பொ. ஜேம்ஸ் துணைச்செயலாளராகவும், மு. ஆறுமுகம் பொருளாளராகவும், 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வத்தலக்குண்டு:

18—4—57ல், வத்தலக்குண்டு தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் பெ. ஒண்டிமுத்து தலைமையில் நடைபெற்றபோது மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஊத்துக்குழி:

15—4—57-ல் நடைபெற்ற ஊத்துக்குழி தி.மு. கழக நிர்வாகிகள் தேர்தலில் தோழர்கள் த. மு. பழனிசாமி செயலாளராகவும், கிருட்டிணன் துணைசெயலாளராகவும், சி. செல்லப்பன் பொருளாளராகவும், முத்து-ஆறுமுகம் மாவட்டப் பிரதிநிதிகளாகவும், நா. பக்கிரிசாமி விளம்பர உறுப்பினராகவும், 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வெல்லோனி எஸ்டேட்:

14—4—57-ல் வெல்லோனி எஸ்டேட் தி. மு. கழக 3-வது ஆண்டுவிழாவும், தி. மு. கழக தேர்தல் வெற்றி விழாவும் தோழர் ஏ. வெள்ளைச்சாமி தலைமையில் நடைபெற்றபோது 1006 பேருக்கு மேல் உணவளிக்கப்பட்டதுடன், வாண வேடிக்கைகளும் நடைபெற்றது. தோழர்கள் அ. சா. பாலு, இராமசாமி, மயில்சாமி, ஆர். முத்துசாமி, முத்தையா, சிவபெருமாள், கருப்பண்ணன், கூத்தன் முதலியோர் கலந்து கொண்டனர்.

திருப்பூர்:

7—4—57-ல், திருப்பூர் 13-14 வதுவட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது தோழர் சி. மா. கிருட்டிணனை செயலாளராகக் கொண்டு 11 பேர் செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

7—4—57-ல் திருப்பூர் 25, 26, 27-வதுவட்ட தி. மு. கழக (கிளை) அமைப்புக் கூட்டம் தோழர் மு. முத்துரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது தோழர் கே. முத்துவை செயலாளராகக் கொண்டு 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

13—4—57-ல் திருப்பூர் தி. மு. கழகச் சார்பில் ஏ. பழனிசாமி தலைமையில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர் க. அன்பழகன் அவர்கள் விரிவுரையாற்றினர். அதுபோது

கழகத் தோழர் தாக்கப்பட்டார்

சிதம்பரம், மே 3—

இன்று மாலை 6-30 மணிக்கு சிதம்பரம் வட்ட—சிவபுரி தி. மு. கழகச் செயலாளர் தோழர் தில்லை—கோவிந்தன் அவர்களை சிலர் கற்களால் அடித்துள்ளனர். அவருக்கு மூக்கிலும், நெற்றியிலும் பல காயங்கள் ஏற்பட்டதால், சிதம்பரம் அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அண்ணாமலை நகர் போலீஸ் நிலையத்தில் புகார் மனு தாக்கல் செய்யப்பட்டு, தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தோழர்கள் பொன்—சொக்கலிங்கம், இரா. சக்கரவர்த்தி ஆகியோர் சென்று, தோழரைக் கண்டு ஆறுதல் கூறியுள்ளனர்.

கோவை மாவட்ட தி.மு.க.தோழர்களுக்கு

வேண்டுகோள்

"மேதிங்கள் 20-ம் நாளிலிருந்து நான் கொடுத்திருக்கும் நிகழ்ச்சி நிரலை, முக்கிய வேலைகளை முன்னிட்டு கீழ்க்கண்டபடி மாற்றியமைத்துக் கொண்டு, குறிப்பிட்ட பகுதித் தோழர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளேன். இதன் மூலம் வரஇயலாமற் போகும் நீலகிரி, தாராபுரம் பகுதிகளுக்கு பிறிதொருமுறை தேதி தருகிறேன் என வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மே 25: கோவை (குறள் விழா)
26: காலை—திருப்பூர் (வழக்குநிதி சிறப்புக்கூட்டம்)
மாலை—மேட்டுப்பாளையம்
27: கோவை (கழகப் பொதுக்கூட்டம்)

"இவை தவிர வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டாம் என பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்"

என்று, தோழர் **கண்ணதாசன்** அவர்கள் அறிவிக்கிறார்.

வேண்டுகோள்

"சிதம்பரம் வட்டத்தில் புதிய கிளைக் கழகங்கள் நிறுவும் தோழர்கள், வட்டக் கழகத்திற்கு அஞ்சல் மூலமாகவோ, நேரிடையாகவோ தெரியப்படுத்துமாறும்;

"கழகச் சொற்பொழிவாளர்கள், நிதி சம்பந்தமாக உள்ள நாடகங்களுக்குத் தலைமை வகிக்கவோ, சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவோ வட்டக் கழகச் செயலாளர் அனுமதி பெற்று கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, சிதம்பரம் வட்டத் தி. மு. கழகச் செயலாளர் பொன்-சொக்கலிங்கம் அறிவிக்கிறார்.

அன்பளிப்பு

4—5—57 மாலை நடைபெற்ற பெரியமெட்டு தி. மு. கழகக் கூட்டத்தில், தோழர் ஆனந்தன் அவர்களின் பெண் மகவுக்கு, தோழர் க. அன்பழகன் அவர்கள் 'கருணாநிதி' என்றும், தோழர் மு. தாஸ் அவர்களின் பெண் மகவுக்கு தோழர் மு. கருணாநிதி அவர்கள் 'அன்பழகி' என்றும், தோழர் பாலன் அவர்களின் ஆண் மகவுக்கு 'வெற்றி வீரன்' என்றும் பெயர் சூட்டினார்கள். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 3 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

கரியாபட்டணம்

'நம்நாடு' விற்பனையாளர்
கே. எஸ். முருகையன்
'முருகு நியூஸ் மார்ட்'
கரியாபட்டணம் (அஞ்சல்)
தஞ்சை மாவட்டம்

சேலம் தொகுதி வழக்கு நிதிக்கு ரூ. 23—1—6 வழங்கப்பட்டது.

கைத்தறியாளர் அவதியுறும் நிலைபற்றி அண்ணா

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இருக்குமானால், அது கைத்தறிக்கு ஒரு கணிசமான அளவு உதவ முடியும்.

மூன்று பெண்டாட்டிக்காரன் நிலையில் சர்க்கார்!

"ஆனால், நமது சர்க்காரோ, மூன்று பெண்டாட்டிக்காரன் போல திண்டாட்டமான நிலையில் இருப்பதாக நான் முன்பே கூறியிருக்கிறேன்.

"கதர், கைத்தறி, ஆலை இம் மூன்றையும் சர்க்கார் ஆதரிப்பவர்களாக உள்ளனர். இந்த நிலையில் தெளிவுவேண்டும் என்று நாம் கூறுகிறோம்.

ஆச்சாரியார் பெற்ற ஒரே வாய்ப்பு!

"கைத்தறித் தொழில் நின்று நிலைக்கவேண்டுமானால்—பிரச்சினைகள் நிரந்தரமாகத் தீர்க்கப்படவேண்டுமானால் அதற்கும் ஒரே ஒரு பரிகாரம் உண்டு.

"சில ரகத் துணிகளை நெய்வதை, கைத்தறிக்கென்றே பிரத்தியேகமாக ஒதுக்கி வைக்கவேண்டும் என்று ஆச்சாரியார் ஒரு திட்டம் கூறினார். அவர் தம் வாழ்நாளில், எல்லோரையும் ஒன்றுபடுத்துகிற வகையில் பெற்ற ஒரே வாய்ப்பு அந்தத் தீர்மானம் தான். சட்டசபையில் அத்தனை கட்சிகளும் அன்று அந்தத் தீர்மானத்தை ஆதரித்தன.

ஊறுகாய்ப் பானையில்!

"ஆச்சாரியாரின் அரசியல் தெளிவை, குறைத்து மதிப்பிடுவார் இல்லை; தேச பக்தியைச் சந்தேகிப்பார் இல்லை; விடுதலைப் போராட்டங்களில் அவருக்குள்ள பங்கினைப் போற்றுதார் இல்லை. இருந்தும் அந்தத் தீர்மானம் எல்லாக் கட்சியினரின் ஆதரவையும் பெற்று அவ்வளவு பலத்தோடு டில்லி சென்ற தீர்மானம்—டில்லி சர்க்காரால் குப்பைக் கூடைக்கு அனுப்பப்பட்டுவிட்டது என்று நான் கூறினால் தீர்மானத்தை நிறைவேற்றியவர் மனம் புண்படும் என்பதால்—'டில்லி சர்க்கார், தீர்மானத்தை ஊறுகாய்ப் பானையில் போட்டுவிட்டனர்' என்று நான் கூறுகிறேன்.

இந்த நேரத்தில்தான்!

"இந்தச் சந்தர்ப்பத்தில்தான், மேயர் அவர்களே! எங்களைப் போன்றவர்களுக்கு, 'நமக்கென ஒரு அமைச்சர் தனம் இருந்தால்.........!' என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆபத்தான பேச்சு!

"'கைத்தறியாளர்கள், இந்த கைத்தறியையே நம்பிக் கொண்டிருக்கக்கூடாது; விசைத்தறியை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதில் அவர்களுக்கு, இப்போது கிடைப்பதைவிட அதிக ஊதியம் கிடைக்கும்' என்று, ஆலைக்காரர்களின் பிரதிநிதியான வெங்கிடசாமி நாயுடு அவர்கள் கூட்டம் ஒன்றில் பேசியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன்.

"உ கடை வைத்திருப்பவனைப் பார்த்து, 'இதில் உனக்கு 50 ரூபாய்தானே மாதம் கிடைக்கிறது? கள்ளுக் கடை வைத்தால், அதிகமாகக் கிடைக்கும்' என்று கூறுவதைப் போலிருக்கிறது இந்தப் பேச்சு!

"கைத்தறிக்கு வரவிருக்கும் ஆபத்தை-விசைத்தறி திணிப்பை இப்படி சூசகமாக அறிவித்திருக்கிறார் அவர்-என்றே நான் அஞ்சுகிறேன்.

"சின்னஞ் சிறு குழந்தை விபரமறியாமல், குடும்ப இரகசியங்களைக் கூறிவிடுவது உண்டு; அதுபோல, வெங்கடசாமி நாயுடு அவர்கள், சின்னஞ் சிறு குழந்தையாக இல்லாவிடினும், இரகசியத்தைக் கூறிவிட்டார். விசைத்தறியைத்தான் நெசவாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிவரும் என்பதைத் தெரிவித்து விட்டார்.

உத்தரவாதம் தருவாரா?

"சர்க்கார், இந்த விசைத்தறி விஷயத்தில் திட்டவட்டமான கொள்கை என்ன என்பதைத் தெரிவிக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். விசைத்தறி திணிக்கப்படமாட்டாது என்ற உத்தரவாதம் தரவேண்டும் சர்க்கார் என்று நான் விரும்புகிறேன்.

ஒன்று—ஒன்பது பேர்களை வேலையற்றுவிடச் செய்யும்

"இந்த விசைத்தறித் திணிப்பு நெசவாளருக்குப் பெரியதோர் ஆபத்து என்பதை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பலவும் எடுத்துச் சொல்லியிருக்கின்றன.

"ஒரு விசைத்தறி ஒன்பது நெசவாளர்களை வேலையிழக்கச் செய்யும் என்று எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

கூறவா வேண்டும்?

"இதற்குப் பின்னும் விசைத்தறி திணிக்கப்படுமானால், ஏற்படக்கூடிய நிலை மிகப் பயங்கரமானதாக இருக்கும் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. நெசவாளர்களிடை மீண்டும் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும் என்பதையும் கூறத்தேவையில்லை.

சட்டபூர்வமான பாதுகாப்பு

"எனவே, விசைத்தறி திணிக்கப்படமாட்டாது என்று சர்க்கார் உத்தரவாதம் தரவேண்டியதும், கைத்தறிப் பாதுகாப்பிற்கு அவசியமாகிறது.

மேலும், கைத்தறி நின்று நிலைக்க, ஆச்சாரியார் போன்றவர்களும் ஒப்புக்கொண்டபடி, மில் போட்டியிலிருந்து கைத்தறிக்குச் சட்டபூர்வமான பாதுகாப்பு வேண்டும்.

நிச்சயம் இயலும்

"போட்டியிலிருந்து பாதுகாப்பும், நெசவாளருக்கு நல்வாழ்வும் தரப்படுமானால் துணி நெசவில், ஆலைகள் கூட்டுகிற நேர்த்தியைக் கைத்தறியும் நிச்சயம் கூட்ட முடியும் என்று நான் நம்புகிறேன்.

திறமை நீடிக்குமா?

ரூ. 300, 400 பெறுமானமுள்ள சேலைகளை நெய்கிறான் நெசவாளி. அதில் அவன் தனது கைவண்ணத்தையும் திறமையும் காட்டி கஷ்டப்பட்டு உழைக்கிறான். நெய்துகொண்டேயிருக்கும்போது அவன் மனைவி எதிர்ப்படுகிறாள்; அவளது சேலையோ மூன்று ரூபாய்கூடப் பெறாது; அதுவும் முப்பது பொத்தல்கள் நிறைந்தது என்றால், எத்தனை நாளைக்கு அவன் இந்தத் தொழிலைத் திறமையோடு செய்வான் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

வசதி செய்க!

"எனவே, நெசவாளிக்குத் தகுந்த கூலி நிர்ணயம் வேண்டும், அவன் வாழ்க்கைத்தரம், படுமோசமான நிலையிலிருந்து உயர்த்தப்படவேண்டும்; செய்கின்ற தொழிலினால் நமக்குப் போதுமான வசதி கிடைக்கிறது என்ற திருப்தி அவனுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும்.

"நடிகனும், கைத்தறியாளனும்தான், தன் மகனை, தாங்கள் செய்கின்ற தொழிலில் விடமாட்டோம் என்று கூறுவார்கள். எங்கள் ஊரில் எல்லாம், நாங்கள் குழந்தைகளாயிருக்கும் போது, சரியாக படிக்காத பிள்ளைகளை, 'சரியாகப் படிக்காவிட்டால் தறி வேலைக்கு அனுப்பிவிடுவேன்,' என்று கூறித்தான் பயமுறுத்துவார்கள். அத்தனை கஷ்டமான தொழில், இந்தக் கைத்தறித் தொழில்!

"இதில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு நல்ல வாழ்க்கை கிடைக்க வேண்டுவது மிக அவசியமாகும்.

புரையோட விடாதீர்!

"கண்ணுக்கு 'சாலேஸ்வரம்' வந்திருக்கும்போது, அதனைக் கவனிக்காவிட்டால், கண் ஆபரேஷன் செய்யவேண்டிவரும். அதுபோல, இந்தத் தொழிலுக்கு 'சாலேஸ்வரம்' வந்துள்ள இந்த நேரத்திலேயே நாம் தகுந்த பரிகாரம் தேடாவிட்டால், பின்னர், 'ஆபரேஷன்' செய்ய நேரிடும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

விலைவாசி ஏற்றம் குறையுமாறு செய்க!

"நெசவாளிக்குப் போதுமான கூலி கிடைத்தால் மட்டும் சாலாது; கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அவன் குடும்பத்தை நடத்தக்கூடிய வகையில், விலைவாசி ஏற்றத்தையும் கட்டுப்படுத்திக் குறைத்தாக வேண்டும்.

கண்டுபிடியுங்கள்!

"பண்டங்களைப் பதுக்கிவைத்து விலையை ஏற்றுவோரைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவேண்டும்; பண்டங்களின் விலை சரசமாயிருந்தால்தான் மக்கள் வாங்க முடியும்; மக்கள் பண்டங்களை வாங்கினால்தான் உற்பத்தி பெருக முடியும்.

குடிசையில்தான் வாழ வேண்டுமா!

"மேலும் நாம், இன்னொன்றையும் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். அதுதான் கைத்தறி ஒரு குடிசைத் தொழில் என்று அழைக்கப்படுவதால், அதில் ஈடுபட்டிருப்போர் என்றென்றைக்கும் குடிசையில்தான் வாழ வேண்டுமென்பது அல்ல என்பதாகும்.

"Cottage Industry என்ற ஆங்கிலச் சொல்லை குடிசைத் தொழில் என மொழிபெயர்த்தார்கள், அவ்வளவுதான்; மேலை நாட்டில் இந்தக் குடிசைத் தொழில் என்றால், இயந்திரமே சலவாது மேற்கொள்ளப்படும் தொழில் என்றுதான் பொருள் கொள்கின்றனர். அந்தப் பொருள்தான் நமது நாட்டிலும் கொள்ளப்படல் வேண்டும்.

"ஆகையால், கைத்தறியைக் குடிசைத் தொழில் என்று அழைப்பதாலேயே, சிலர் அந்தத் தொழிலாளர்கள் என்றென்றைக்கும் குடிசைகளில் தான் வாழவேண்டும் என்று எண்ணுகின்றனர் போலும்! அது அல்ல என்பதையும் நாம் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும்."

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

மே
17 : இலுப்பக்குடி (அரியலூர்)
18 : வி. களத்தூர்
19 : திருவில்லிப்புத்தூர்
21 : ஆண்டாள்கோயில்
22 : ஆலங்குடி
23 : தேவனுஞ்சேரி
24 : ஏற்காடு தொகுதி
25 : சென்னை

விலை ஏற்றத்திற்கான காரணம் என்ன?

ஆராய்ச்சி நடத்தப் போகிறதாம் டில்லி சர்க்கார்

புதுடில்லி, மே 14—

"எந்தவிதக் கொடிய கஷ்டங்களும் வந்துறும் என அஞ்சத் தேவை இல்லை என்கிற அளவுக்கு உணவுப் பொருள் விநியோக நிலை இருக்கிறது," என்று, உணவு மந்திரி அஜித் பிரசாத் ஜெயின் மக்கள் சபையில் தாக்கல் செய்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர், 'உணவு உற்பத்தி பெருகியிருந்தும் விலை ஏற்றம் ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதை ஆராய ஒரு உயர் அதிகாரம் படைத்த குழு நியமிக்கப் படும்' என்றும் கூறியிருக்கிறார்.

இரயில்வே வரவு--செலவுத் திட்டம்

சாமான் போக்குவரத்துக் கட்டணம் உயர்வு

பிரயாணக் கட்டணமும் உயருமாம்

புதுடில்லி, மே 14—

இரயில்வேயில், 'கூட்ஸ்' மற்றும் பார்சல் போக்குவரத்திற்கான கட்டணத்திற்கு விதிக்கப்படும் 'சப்ளிமெண்டரி சார்ஜ்' என்ற மேல்விகிதக் கட்டணம் 1957 ஜூலை முதல் 6¼ சதவிகிதமாக இருந்தது 12½ சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்றும், இதனால் ஆண்டுதோறும் கூட்ஸ் போக்குவரத்தினால் ரூ. 11·3 கோடியும் பார்சல் போக்குவரத்தினால் ரூ. 1·2 கோடியும், உபரியாகக் கிடைக்கும் என்றும் இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த மந்திரி செகசீவன்ராம் தெரிவித்திருக்கிறார்.

இந்த வரிவிதிப்பிலிருந்து சில பொருள்களுக்கு விலக்களிக்கப்பட்டிருப்பதாயும் அவர் கூறினார்.

வரவு - செலவு

1957—58-ம் ஆண்டிற்கான இரயில்வே வரவு-செலவுத் திட்டத்திற்படி நிகர உபரி வருமானம் ரூ. 30·38 கிடைக்குமாம்.

மொத்த போக்கு-வரத்து வருமானம் ரூ. 377·90 கோடி; மொத்தச் செலவு ரூ. 303·28 கோடி — வேலைச் செலவு ரூ. 244·16 கோடி; பலவகைப்பட்ட செலவு ரூ. 14·12 கோடி; தேய்மான நிதிக்கு ஒதுக்கப்பட்ட செலவு ரூ. 45·00 கோடி என்றும், எனவே, நிகர இரயில்வே வருமானம் ரூ. 74·62 கோடி என்றும், இதிலிருந்து பொது வருவாய்க்குத் தரப்படவேண்டியது ரூ. 43·79 கோடி போக உபரியாக ரூ. 30·83 கோடி என்றும் மந்திரி கணக்கிட்டுக் கூறியிருக்கிறார்.

பிரயாணக் கட்டணம்

பிரயாணக் கட்டணத்தில் மாறுதல் எதுவும் இப்போது கொண்டுவரப்படவில்லை என்றும், இது குறித்து நிதி மந்திரி யோசித்துக்கொண்டிருப்பதாகவும் மந்திரி கூறியிருக்கிறார்.

பணம் தேவையாம்

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இரயில்வேக்கள் ரூ. 250 கோடி வரை பணம் சேகரித்தாகவேண்டும். இரயில்வேயின் இரண்டாம் திட்டம் ரூ. 1,125 கோடி மதிப்புடையது; அதனை நிறைவேற்ற தேவைப்படும் தொகையில் துண்டு விழுவதைச் சரிக்கட்ட ஆண்டுதோறும் ரூ. 50 கோடி வரை பணம் தேடியாகவேண்டியுள்ளது,' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நன்றி

மந்திரி தொடர்ந்து பேசுகையில், சாமான் போக்குவரத்துக் கட்டண விசாரணைக் குழுவிலிருந்து பணியாற்றிய சர். ஏ. இராமசாமி முதலியாருக்கும், அவரது சகாக்களுக்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

கழகக் கூட்டங்கள்

★

இலுப்பக்குடி :
(பெரம்பலூர் வட்டம்)
17—5—57 மாலை 4 மணிக்கு
தலைவர் : அரு. ஆதிமூலம்
பேசுவோர்:
என். வி. நடராசன்
அன்பில்-தர்மலிங்கம்
பி. ஆர். இரத்தினசாமி
(இரவு 'நல்ல தீர்ப்பு' நாடகம் நடைபெறும். இலுப்பக்குடி—அரியலூருக்கு மேற்கே 5 கல் தொலைவில் உள்ளது.)

★

சிங்கத்தம்பூர் :
வண்டிப்பேட்டை மைதானம்
17—5—57 மாலை 6-மணிக்கு
தலைவர் : தீ. இராமசாமி
பேசுவோர் :
சத்தியவாணிமுத்து
அன்பில்-தர்மலிங்கம்

★

சுண்டக்காம்பாளையம்:
கே. வி. கே. சாமி திடலில்
17-5-57 இரவு 7-30 மணிக்கு
தலைவர் : ஓ. எஸ். இராமசாமி
கொடியேற்றுபவர் :
மு. நல்லமுத்து
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
என். இரத்தினம்
மு. குழந்தைவேல்

★

சென்னை—மைலாப்பூர்:
சித்திரகுளம் அருகாமையில்
17—5—57 மாலை 6-மணிக்கு
தி. மு. கழகத் திறப்புவிழா
திறப்பாளர் :
பி. பாலசுப்பிரமணியம்
பேசுபவர் :
இரா. நெடுஞ்செழியன்

பாராட்டுக் கூட்டம்

17—5—57 அன்று, தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம், டி. இருசப்பன் ஆகியோரைப் பாராட்டி, ஓர் பொதுக்கூட்டம் ஆத்தூர் தொகுதி--எத்தாப்பூரில் நடைபெறும்; அதுபோது, பேராசிரியர் க. அன்பழகன், தோழர்கள் எம். குப்புசாமி, எல். கலியமூர்த்தி, ஆர். பூவராகசாமி, வி. பரமசிவம், ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். தோழர் எம். பி. சுப்பிரமணியம், டி. இருசப்பன் ஆகியோர் நன்றியுரையாற்றுவர்.

பம்பாய்—தாராவி தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு :

19—5—57 மாலை 6-மணியளவில், பம்பாய்—தாராவி தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் 'திராவிடாக'த்தில் நடைபெறும்; அதுபோது காலியான செயற்குழு உறுப்பினர் ஒருவருக்குத் தேர்தல் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு, செயலாளர் ந. மு. பெர்னோ கேட்டுக் கொள்கிறார்.

நெல்லை மாவட்டம்—
மேலப்பாளையம் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு :

17—5—57 மாலை 5-மணியளவில் மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டம், மேலப்பாளையம் தி. மு. கழகப் பணிமனையில் நடைபெறும்.

ஐதராபாத், மே 13—

இரண்டு இலட்சம் இந்தியப் பாதரட்சைகளை வாங்குவதற்கு இந்தியாவுடன் ரஷ்யா செய்து கொண்ட உடன்பாட்டின்படி, 3,800 காலணிகள் 14-ந்தேதியன்று ரஷ்ய அதிகாரியிடம் தரப் படும். இவைகள் ஐதராபாத்தில் தயாரிக்கப்பட்டவையாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.